**O.S.No. 120/2018**

**PW 1 : சந்திரசேகரன்** தேதி 07.10.2025

**வாசா 1 மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் மகன்கள் பெயர் அமர்நாத் மற்றும் ராம்பிரசாத். அமர்நாத் மூலமாக ஏற்கனவே 2018 ல் வழக்கறிஞர் அறிவிப்பு 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அறிவிப்பு என்றால் சரிதான் அது **பிவாசாஆ 2.** அந்த அறிவிப்பில் எந்த இடத்திலாவது சாவித்திரி ஓ.கே.நாச்சிமுத்து முதலியாரின் சுவீகார பிள்ளை என்று குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக சுவீகார புத்திரி என்று எழுதப்படவில்லை என்றால் தவறுதலாக விடுபட்டு போனது என்று சொல்கிறேன்.பிவாசாஆ 2 அறிவிப்பில் ராம்பிரசாத் வெங்கேடசன் சாவித்திரி வளர்ப்பு மகன் வளர்ப்பு மகள் என்று வாசகங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வளர்ப்பு மகன் வளர்ப்பு மகள் மற்றும் சுவீகார மகன் சுவீகார மகள் என்பதற்கு வித்யாசம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சாவித்திரியை வளர்ப்பு மகள் என்று சொல்கிறேனா அல்லது சுவீகார புத்திரி என்று சொல்கிறேனா என்றால் சுவீகார புத்திரி என்று சொல்கிறேன். பிவாசாஆ 2 ல் எதன் அடிப்படையில் வளர்ப்பு மகள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அது என் மகன் அமர்நாத் அனுப்பியதால் அது எனக்கு தெரியாது. பிவாசாஆ 2 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சாவித்திரியை வளர்ப்பு மகள் என்று சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் சாவித்திரி வளர்ப்பு மகளோ அல்லது சுவீகார புத்திரியோ அல்ல என்றால் சரியல்ல. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் அவருடைய மனைவி ராஜம்மாள்

ஆகியோர் சாவித்திரியை வளர்ப்பு மகளாகவோ சுவீகார புத்திரியாகவோ பாவிக்கவில்லை என்றும் அதனால் தான் என்னுடைய பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சாவித்திரி பற்றிய விவரத்தை முன்னுக்கு பின் முரணாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 க்கு வெங்கேடசன் தரப்பில் பதில் அனுப்பப்பட்டது என்றால் நினைவு இல்லை. பதில் கொடுத்திருப்பதாக 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அது நினைவில் இல்லை. வெங்கடேசன் என் மீதும் இதர நபர்கள் மீதும் ஈரோடு முதல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ வ எண். 320/18 வழக்கை தாக்கல் செய்திருந்தார் சரிதான். அந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் பிவாசாஆ 2 மற்றும் வெங்கடேசனால் கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு ஆகியவை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சொத்துகளின் மீதான உரிமை மற்றும் அனுபவித்து இருப்பதற்கான ஆவணங்கள் ஆகியவற்றை வெங்கடேசன் தாக்கல் செய்திருந்தால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தோன்றா தரப்பினராக இருந்தேன் என்றால் சரியல்ல வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தினேன். 3 முறை அந்த வழக்கில் ஒரு தலைபட்ச தீர்ப்பான பிறகு நான் அந்த வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை என்றும் நீதிமன்ற உத்தரவையும் பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளரை இடையூறு செய்யும் எண்ணத்தில் மேற்படி வழக்கை தொடரவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் பிராதில் உள்ள சங்கதிகள் தான் அ வ எண் 320/18 வழக்கில் நாங்கள் எதிர் வழக்குரையாக தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் 1ம் பிரதிவாதி ராஜம்மாள் மன நிலை பாதிகப்பட்டவர் மற்றும் காது கேளாதவர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராஜம்மாள் மனநிலை பாதிகப்பட்டவராக சொல்லப்படுவதற்கு

மருத்துவ ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அது சம்மந்தமாக சாட்சியம் யாரையாவது விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. எந்த மருத்துவமனையில் எந்த காலத்தில் இருந்து எந்த காலம் வரை மனநிலை பாதிப்பு சம்மந்தமாக சிகிச்சை எடுத்து கொண்டார் என்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி ராஜம்மாள் நல்ல உடல்நிலை மனநிலையில் தான் இருந்தார் என்றும் நான் சொல்வது போல் மனநிலை பாதிகப்படவில்லை என்றும் இறப்பதற்கு 1 வருடத்திற்கு முன்பாக வயோதிகத்தின் காரணமாக உடல் நிலை பாதிகப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ராஜம்மாள் மனநிலை பாதிகப்பட்டவர் என்று என்னுடைய மைத்துனர் சண்முகவேலாயுதத்தை ராஜம்மாளுக்கு காப்பாளராக நியமனம் செய்ய கோரி நீதிமன்றத்தில் இடை நிலை மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த மனு உரிய விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் ராஜம்மாள் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார் என்று சொன்னால் அந்த மனுவின் பெயரில் மேல்முறையீடு செய்திருக்கிறோம். அந்த மேல்முறையீடு எண் மற்றும் அந்த மேல்முறையீடு எந்த நீதிமன்றத்தில் உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் மேற்படி உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராஜம்மாள் உயிருடன் இருந்த காலத்திலேயே நாங்கள் பிராதில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து இவ்வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால் சரிதான் ஆனால் ராஜம்மாள் அந்த எதிர் வழக்குரையை தாக்கல் செய்யவில்லை. ராஜம்மாள் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய கூடிய சூழ்நிலையில் இல்லை என்றும் மறுத்து பதில் உரை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொன்னவாறு பதில் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ராஜம்மாள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை அவருடையது அல்ல என்று எந்த இடத்திலாவது சொல்லியிருக்கிறேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொல்லியிருக்கும் சங்கதிகள் உண்மையானவை அல்ல என்பதால் தான் அதனை குறித்து பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகனை ராஜம்மாள் வளர்ப்பு மகனாக வளர்த்து வந்ததாக நான் சொல்லியிருக்கும் சூழ்நிலையில் எதற்காக என்னுடைய மைத்துனர் சண்முகவேலாயுதத்தை ராஜம்மாளுக்கு பாதுகாப்பாளராக இந்த வழக்கில் நியமனம் செய்ய மனு செய்திருந்தேன் என்றால் என் மகன் கல்லூரியில் படித்து கொண்டிருந்ததால் (சாட்சி பின்னிட்டு பெங்களூரில் வேலை பார்த்ததால் ) நான் என் மகனை ராஜம்மாளுக்கு பாதுகாப்பாளராக கோரவில்லை. சண்முகவேலாயுதத்திற்கு அனைத்து விவரங்களும் தெரியுமா என்றால் தெரியும். அவரை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிக்க போகிறேன். என்னுடைய பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சண்முகவேலாயுத்திற்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்று குறிப்பாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. ராஜம்மாள் தன்னுடைய எதிர் வழக்குரையில் தன்னுடைய கணவர் இறப்பிற்கு பின்னிட்டு வாரிசு உரிமை படி கணவரின் சொத்துகளை அடைந்து அதனை 2ம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு 9.1.2012 தேதியில் தானசெட்டில்மென்ட் பத்திரம் மூலம் சொத்தினை ஒப்படைத்து சுவாதீனம் வழங்கிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தை தான் செல்லாது என்று அறிவிக்க கோரி இவ்வழக்கில் பரிகாரம் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் ராஜம்மாள் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுள்ளார் என்பதும் பதிவாளர் அலுவலகத்தில் ரேகை இட்டுள்ளார் என்பதையும் தெரிந்து கொண்டேனா என்றால் அவருடைய கையெழுத்து அல்ல என்று சொல்கிறேன். மேற்படி தானசெட்டில்மென்ட்

பத்திரத்தில் உள்ள கையெழுத்து ராஜம்மாளுடைய கையெழுத்து அல்ல என்பது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் சாட்சிகள் மூலம் நிரூபிக்க தயாராக இருக்கிறேன். மேற்படி ராஜம்மாளுக்கு பதிலாக வேறு நபரை காண்பித்து ஆவணம் பதிவு செய்து விட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. 2018 ல் தான் மேற்படி தானசெட்டில்மென்ட் ஆவணம் குறித்து எனக்கு தெரிய வந்தது. அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். ராஜம்மாள் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த விவரம் அதன் படி 2ம் பிரதிவாதி வெங்கடேசன் அடைந்து அனுபவத்து வரும் விவரம் எனக்கு 2012 ல் தெரியும் என்று சொன்னால் சரியல்ல அப்போது தெரியாது. ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியார் இறந்த பின்னிட்டு 2012 பின்னிட்டு சொத்தில் கடைகளும் அடுக்கமாடி வீடுகளும் கட்டப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு அடுக்கமாடி கட்டிடங்களும் கடைகளும் கட்ட 2ம் பிரதிவாதி வெங்கடேசன் வங்கியில் லோன் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் அதை ஒப்பு கொண்டால் என் வழக்கிற்கு விரோதமாக போய்விடும் என்பதால் அதை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் படித்து பார்த்திருக்கிறேன். அதில் உள்ள சாட்சிகள் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் உள்ள சாட்சிகள் மற்றும் அவர்களது முகவரி உள்ளது என்றால் சரிதான். அவர்களை விசாரிக்க முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்யவில்லை. தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் சாட்சிகள் உண்மை என்பதால் தான் அவர்களை விசாரித்து தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாக வங்கியை எதற்காக தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் 2018 ல் 2ம் பிரதிவாதி லோன் வாங்கிய விவரம்

எனக்கு தெரிய வந்ததால் வங்கியை தரப்பினராக சேர்த்திருக்கிறேன். வங்கி 2ம் பிரதிவாதிக்கு தவறாக லோன் கொடுத்திருப்பதால் தரப்பினராக சேர்த்திருக்கிறேன். நாளது வரை தானசெட்டில்மென்ட் பத்திரம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். சொத்து வரி மின் இணைப்பு குடிநீர் வரி ஆகியவை வெங்கடேசன் செலுத்தி ரசீதுகள் பெற்றுள்ளார் என்றால் மேற்படி விவரம் 2018 ல் தான் எனக்கு தெரியவந்தது. அவ்வாறு 2018 ல் தெரிந்த பிறகு உரிய அதிகாரிகளிடம் என்னுடைய ஆட்சேபணையை தெரிவித்தேனா என்றால் இல்லை. அ வ எண்.320/2018 வழக்கில் வெங்கேடசன் தரப்பில மேற்படி சொத்து வரி, மின் இணைப்பு, குடிநீர் வரி ஆகியவற்றை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால் அது எனக்கு நினைவில் இல்லை. உண்மையான உரிமையாளர் என்ற அடிப்படையில் 2ம் பிரதிவாதி வெங்கடேசன் அவருடைய உரிமை ஆவணங்களை காண்பித்து 4 ம் பிரதிவாதி வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றும் அதை ஆட்சேபணை செய்யவோ மறுக்கவோ எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 3 4 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர் என்றும் அதனால் இவ்வழக்கு பாதிக்கிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல பூர்வீக சொத்து என்று சொல்கிறேன். எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என் மனைவி ராஜம்மாளின் ஒரே வாரிசு என்பதால் சொத்துகளுக்கு வாரிசு உரிமை படி இவ்வழக்கு என் மனைவியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எந்த உரிமையில் என் மனைவிக்கு தாவா சொத்தில் பாத்தியம் ஏற்படுகிறது என்றால் ராஜம்மாள் என் மனைவியை சுவீகாரம் எடுத்துள்ளதால் அதன் படி உரிமை கோருகிறார். நாச்சிமுத்துக்கு பூர்வீக சொத்தாக இருப்பின் நாச்சிமுத்து இறந்த உடன் என் மனைவி சொத்தின் பேரிலான உரிமை குறித்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ராஜம்மாள் உயிருடன் இருக்கும் போது வழக்கு

தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. ராஜம்மாள் உயிருடன் இருக்கும் போது என் மனைவி ராஜம்மாளிடம் பாகப்பிரிவினை கோரியதாக சொல்லவில்லை. என் மனைவி ராஜம்மாளின் சுவீகார புத்திரி என்று சொல்வதும் அதன் அடிப்படையில் தாவா சொத்தில் என் மனைவிக்கு உரிமை உள்ளது என்று சொல்வதும் அது போல் ஓ.ஏ.கே.நாச்சிமுத்து முதலியாருக்கு சொத்துகள் பூர்வீக சொத்துகள் எனறு சொல்வதும் வழக்கிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. ராஜம்மாளால் எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் 2 ம் பிரதிவாதி வெங்கடேசனை தானும் தன்னுடைய கணவர் நாச்சிமுத்து முதலியாரும் வளர்ப்பு மகனாக பாவித்து வந்ததாக வாசங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் ஆனால் அது தவறு என்று சொல்கிறேன். பிவாசாஆ 2 ல் வெங்கடேசனை வளர்ப்பு மகன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அதை நான் அனுப்பவில்லை என் மகன் தான் அனுப்பினார். ராஜம்மாளால் எழுதி வைக்கப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரத்திலேயே வெங்கடேசனை வளர்ப்பு மகனாக காட்டியுள்ளது போல் என் மனைவி சாவித்திரியை சுவீகார புத்திரி என்று ராஜம்மாளால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை. வாசாஆ 4 திருமண பத்திரிக்கை உண்மையானது அல்ல அது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 4 பிரஸ் உரிமையாளரை விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் 50 வருடங்கள் ஆகிவிட்டதால் அதனை கண்டுபிடிக்க முடியாது. அதனால் தான் அவர்களை விசாரிக்க முடியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2012 ல் ராஜம்மாளால் எழுதி வைக்கப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் பற்றி 2018 ல் தெரிந்து கொண்ட பிறகு வெங்கடேசனுக்கு பாகப்பிரிவினை கோரி அறிவிப்பு ஏதாவது அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த

அறிவிப்பை நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் சங்கதிகள் எதுவும் உண்மையானது அல்ல என்றும் 2ம் பிரதிவாதியை இடையூறு செய்யும் எண்ணத்திலும் ஆதாயம் பெறும் எண்ணத்திலும் இந்த வழக்கை என் மனைவி தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. சுவீகார புத்திரி என்பதை காட்டுவதற்காக வாசாஆ 4 ஆவணம் எங்களால் தயாரித்து கொள்ளப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பேரில் என் மனைவிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எதற்காக விளம்புகை பரிகாரம் என் மனைவியால் கோரப்பட்டது என்றால் என் மனைவி ராஜம்மாளுக்கு ஒரே வாரிசு என்ற அடிப்படையில் ராஜம்மாளின் சொத்துகளுக்கு உரிமையாளர் என்ற முறையில் விளம்புகை பரிகாரம் கோரியிருக்கிறார். ஏற்கனவே வெங்கடேசனால் தாக்கல் செய்யப்பட்ட 320/18 வழக்கில் இவ்வழக்கின் சங்கதிகள் முழு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த வழக்கு வெங்கடேசனுக்கு ஆதரவாக நிரந்தர தடை உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு சங்கதிகள் உண்மையானது அல்ல என்பதால் தான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி கூட்டு சுவாதீனத்தில் இருப்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் என் மனைவிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் ராஜம்மாள் இறந்த பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்ட திருத்தல் மனுக்கல் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் மேல்முறையீடு தாக்கல்

செய்திருக்கிறேன் என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அதை பற்றிய விவரங்கள் சொல்லமுடியுமா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.